# திராவிட சினிமா 9

**கருத்து மக்களிடம் பற்றிக் கொண்டால் தீயாகப் பரவும் என்பதுபோல, திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். கல்வியில் முன்னேற்றம் கண்டு கொண்டிருந்த தலைமுறைக்குக் கொள்கை பேசிய கலைவடிவங்கள் பல்கலைக்கழகமாகத் திகழ்ந்தன. அந்த வகையில் திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

# மலைக்கள்ளன்

## திராவிட சினிமாவான ஒரு தேசியவாதியின் புதினம்!





படங்கள் உதவி : ஞானம்



**கோ**வை பட்சிராஜா ஸ்டுடியோஸ் அதிபர் **ஸ்ரீராமுலு நாயுடு** அவர்கள் தயாரித்து இயக்கிய 'மலைக்கள்ளன்' பலவகையிலும் தமிழ்த் திரைப்பட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. முதன் முதலாக ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பரிசு பெற்ற தமிழ் படம் இது. கூடுதலாக பட்சிராஜா **ஸ்ரீ**ராமுலு அவர்களாலேயே ஆறு மொழிகளில் தயாரித்து, இயக்கப்பட்டு மாபெரும் வெற்றி பெற்ற திரைப்படமும் இதுதான்.

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் அவர்கள் எழுதிய புதினத்தைத் திரைப்படமாக்க முனைந்தபோது, கலைஞரிடம் திரைக்கதை-வசனம் எழுதும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அநேகமாக அன்றைய நிலையில், 1954-ஆம் ஆண்டில், தமிழ் சினிமாவின் உச்சமான கதை-வசனப் பிரபலம் கலைஞரே. எம்.ஜி.ராமச்சந்தர் ஆக இருந்தவர் எம்.ஜி.ராமச்சந்திரன் ஆனதும் இந்தப் படத்தில்தான். கலைஞருடனான நட்பு அவரை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைய வைத்ததும் இதே ஆண்டில்தான்.

### கலைஞர் உருவாக்கிய அதிநாயகன்

கழக மாநாடுகளில், கூட்டங்களில் பங்கேற்கத் தொடங்கியிருந்தார் எம்.ஜி.ஆர். இவை எல்லாவற்றையும்விட எம்.ஜி.ஆர் திரைப்பட வாழ்க்கையின் மிக முக்கியமான மைல்கல் ஆனது இந்தப் படம். அவரது திரைப்படங்களில் வாழ்நாள் முழுவதும் பேணிய 'ஊருக்கு , குறிப்பாக ஏழை எளியவர்களுக்கு உழைக்கும் நல்லவர், வல்லவர்' என்ற பிம்பம் தீர்க்கமாக உருவானது இந்தத் திரைப்படத்தின் மூலமாகவே.

ஒன்றை உறுதியாகச் சொல்ல முடியும். தனது நண்பர் எம்.ஜி.ஆருக்காக கலைஞர் ஓர் அதிநாயகனுக்கான (SUPER STAR ) அடிப்படைப் பண்புகள் கொண்ட பாத்திரத்தை உருவாக்கினார். கதைக் களம் வழங்கிய வாய்ப்பை முற்றாக பயன்படுத்தி, ஒரு சாகச நாயகனை (ACTION HERO) உருவாக்கினார். **எம்.ஜி.ஆர் எனும் நடிகர், அரசியல் தலைவர் தனது வாழ்நாள் முழுதும் பேணிக் காத்த பிம்பம், கலைஞரின் கற்பனையில் தோன்றியது என்பதை யாரும் மறுக்கவியலாது.**

### எம்.ஜி.ஆர். படங்களுக்கு மூலமாதிரி

நாமக்கல் கவிஞரின், ஆங்கில **'ராபின் ஹூட்'** (ROBIN HOOD) பாத்திரத்தின் சாயலிலான, புதினத்தை லாவகமாக தனது நுட்பமான காட்சியமைப்பு மற்றும் மொழி அழகால் ஒரு திராவிட இயக்கத் திரைப்படமாக்கினார் கலைஞர். **'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு'** எனும் நாமக்கல் கவிஞர் பாடலுடன் தொடங்குகிறது திரைப்படம். ஊரையடித்து உலையில் போடும் ஜமீன்தார், பஞ்சாயத்து போர்டு தலைவர், அசல் கொள்ளைக்காரன் ஆகியோரின் கொள்ளைக் கூட்டணி விஜயபுரியைச் சூறையாடுகிறது. இதனை எதிர்த்துத் தடுக்கும் விதமாகச் செயல்படுகிறார் மலைக்கள்ளன்.

கொள்ளையடிப்பவர்களிடம் கொள்ளையடித்து, ஏழை எளியவர்கள் மற்றும் சமூகத்தால் புறந்தள்ளப்பட்ட பெண்கள் போன்றவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வாழ்வளிக்கிறார். திருப்பங்கள் நிறைந்த திரைக்கதையில் இருதரப்பையும் அச்சத்துடன் பார்க்கின்றனர் பொதுமக்கள். திரைப்படத்தின் இறுதிக்காட்சிகளில் மர்ம முடிச்சுகள் அவிழ்ந்து மலைக்கள்ளன், மக்கள் நலம் பேணும் நல்லவன் என்பது வெளிப்படுகிறது.

எம்.ஜி.ஆருக்கு இந்தப் படத்தில் மூன்றுவிதமான வேறுபட்ட பாத்திர வார்ப்புகள். முதிய மலைக்கள்ளன், அப்துல் ரஹீம் சாயபு, குமாரவீரன். இந்தப் பாத்திரங்களின் உருவ வேறுபாடுகளைக்கூட எம்.ஜி.ஆர், தனது பெரும்பான்மையான பிந்தைய படங்களின், மாறுவேட தோற்றங்களுக்கு 'மாதிரி'யாகப் பயன்படுத்தினார் என்பது கவனத்துக்குரியது. அதாவது 'மலைக்கள்ளன்' படம் எம்.ஜி.ஆர் படங்களின் மூலமாதிரியானது (PROTO TYPE).

### முப்பால் கலந்த வசனம்

கலைஞரின் வசனத் தெறிப்பு, முதல் காட்சியில் வேலையாள் குதிரைக்கு 'பங்கா' ( சாமரம் ) போடச் சொல்லும் காட்சியிலேயே தொடங்கி விடுகிறது. தனக்கு மாப்பிள்ளை தேடச் செல்லும் அப்பாவிடம் பூங்கோதை, 'எனக்குப் பிடித்தால்தான் சம்மதிப்பேன்' என்கிறாள். அவரும் அதை ஆமோதிக்கிறார். திராவிட நவீனத்தின் ஆதாரமான பெண்களின் உரிமை பேசப்படுகிறது. வில்லன் வீரராஜனால் ஏமாற்றப்படும் பெண்ணுக்கு, 'பெண்களால் முடியாதது ஏதுமில்லை' என அறிவுறுத்தப்படுகிறது. சமூகத்தால் இழிவாகப் பேசப்பட்டு ஒதுக்கப் படும் பெண்கள் மலைக்கள்ளனின் 'இணை அரசினால்' அங்கீகரித்து சமத்துவமாக நடத்தப்படுகிறார்கள்.

அப்துல் ரஹீம் சாகிபிடம் 'போர் நிதி' கேட்டு வருகிறார் இன்ஸ்பெக்டர். முதலில், 'பணத்தைப் போட்டு எதிரியைத் தடுக்கப் போகிறார்களா?' எனக் கேலி பேசுபவர், பின்னர் பெருந்தொகையை நிதியாக வழங்குகிறார். வேடம்தான் என்றாலும், இந்த இஸ்லாமியப் பாத்திரத்தின் நல்லெண்ணப் பார்வைகள் நேர்மறையானவையாக அமைந்துள்ளன.

> **இந்தப் பாத்திரங்களின் உருவ வேறுபாடுகளைக்கூட எம்.ஜி.ஆர், தனது பெரும்பான்மையான பிந்தைய படங்களின், மாறுவேட தோற்றங்களுக்கு 'மாதிரி'யாகப் பயன்படுத்தினார்!**

பூங்கோதை - குமாரவீரன் உரையாடல் காட்சிகள் அழகுத் தமிழ் நடையில். பூங்கோதையிடம் தன்னை அறிமுகம் செய்து கொள்ளும்போதே, 'திக்கற்ற பெண்ணைக் காக்க வந்த கடவுளின் அவதாரமல்ல, நான் மலைக்கள்ளன்' என்கிறான். பூங்கோதை, 'வேடன் அம்புக்குத் தப்பிய புறா, பருந்திடம் சிக்கிய கதையாகிவிட்டதே என் நிலை' என்கிறாள். குமாரவீரன், 'நான் வேடமிட்டது வேட்டையாட அல்ல. பூனையிடம் மீட்ட கிளியைக் கூண்டிலடைக்கும் கொடியவனல்ல நான். நீ விரைவில் சுதந்திரமாகப் பறந்து செல்லலாம்' என்கிறான்.

காதல் மலர்ந்ததும் நாணும் பூங்கோதையிடம், 'நாணம், பெண்கள் ஆண்கள் மீது தொடுக்கும் முதல் பானம்' என்கிறான். 'என்ன பேசுகிறீர்கள்' என்பவளிடம் 'தமிழ்' என அதிர வைத்து, 'ஆம் திருக்குறளின் அறம், பொருள், இன்பத்துப் பால் பற்றிப் பேசுகிறேன்' எனக் குழவுகிறான்.

### கலைஞரின் இணை அரசு

மலைக்கள்ளனின் மலை மாளிகை, ஓர் இணையான அரசின் தன்மையுடன் இயங்குகிறது. திருடுவதற்கு ஓர் இலக்கணம் இருக்கிறது என்கிறான் குமாரவீரன். அதாவது 'யாரிடம் திருடுவது என்பதை எங்கள் இலக்கணம் தெளிவாக வரையறுத்திருக்கிறது' என்கிறான். 'இங்கே ஆக்க வேலைக்குத் தொழிற்சாலை, அறிவு வளர்ச்சிக்குக் கல்விச் சாலை, ஓய்வு நேரத்துக்கு விளையாட்டு, நடனம் ஆகியவை உண்டு' என்கிறான். மட்டுமில்லை, 'இங்கே ஜாதிச் சண்டை இல்லை, மதச் சண்டை இல்லை, ஆண், பெண் உள்ளிட்ட எல்லோரும் சமம். இங்கே அறம்தான் நீதி, வாக்குதான் நாணயம்' என்கிறான். ஒருவகையில் அதை திராவிட நாடெனவும் சொல்லலாம்.

ஆம். 'அண்ணா'வின் (முதிய மலைக்கள்ளன்) பிறந்ததினம் நடனத்துடன் கொண்டாடப்படுகிறது. 'ஏன் பகிரங்கமாகச் செயல்படக் கூடாது' எனக் கேட்கும் பூங்கோதையிடம், 'அதற்கான காலம் கனிந்து விட்டது' என்கிறான் குமாரவீரன்.

பாடல்களிலும் திராவிடக் கருத்துகளின் தெறிப்பு உண்டு. தஞ்சை ராமையாதாஸின் பிரபலமான, 'எத்தனைக் காலந்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' பாடல் இடம்பெற்றது இந்தப் படத்தில்தான். கு.மா.பாலசுப்ரமணியத்தின் வரிகள், 'கடவுள் இல்லையென்று பேசுவது எதனாலே, காலங் காலமாய் காத்திருந்தும் அவர் காட்சி கொடுக்கவில்லை அதனாலே' எனப் போகிறது. எஸ்.எம்.சுப்பையா இசையில் உருவான பாடல்கள் காலத்தினூடாக நிலைத்து நிற்கின்றன.

...படம் விரியும்

## விழிவேள்வியும் விருதும்!



1972-ல் தன் பிறந்த நாளின்போது கண்ணொளித் திட்டத்தை அறிமுகப்படுத்தி பலருக்கு ஒளி கொடுத்தார் முத்தமிழறிஞர் கலைஞர். இத்திட்டம் கண் மருத்துவர் ஜி.வெங்கடசாமி அவர்களின் தலைமையின் கீழ் செயல்படுத்தப்பட்டது. அப்போது அவர், மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பணியாற்றினார். பின்னாளில் அரவிந்த் கண் மருத்துவமனை நிறுவினார். அவர் காலமாவதற்குச் சில ஆண்டுகள் முன்பு 'விழிவேள்வி' என்ற சுயசரிதையை வெளியிட்டார்.

அந்த அரவிந்த் கண் மருத்துவமனை, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக மருத்துவக் கழிவுகளைக் குறைப்பது உள்ளிட்ட பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில், புதுச்சேரியில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனை, அந்த முன்னெடுப்புகள் குறித்து 'வேஸ்ட்லெஸ்' எனும் குறும்படம் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளது. அந்தப் படத்துக்கு 'அமெரிக்கன் சொஸைட்டி ஆஃப் காடராக்ட் அண்ட் ரிஃப்ராக்டிவ் சர்ஜரி' எனும் கண் மருத்துவம் சார்ந்த அமைப்பு சமீபத்தில் நடத்திய சர்வதேச கண் மருத்துவத் திரைப்பட விழாவில் 'கிராண்ட் பிரைஸ்' எனும் விருதை வென்றுள்ளது. இது 'கண் மருத்துவத் துறை ஆஸ்கர்' என்று புகழப்படுவது குறிப்பிடத்தக்கது!

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞரும் எம்.ஜி.ஆரும்.!



சதானந்தம்

**தி**.மு.கழகம் தொடங்கப் பட்டது முதலே உறுப்பினராக இருந்து வருகிறேன். 1962-ஆம் ஆண்டு ஜனவரி 14 அன்று தேர்தல் நிதி, கழக வளர்ச்சி நிதி திரட்டும் பொதுக்கூட்டம், தண்டராம்பட்டில் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், எம்.ஜி.ஆர் அவர்களும் வருகை தந்திருந்தனர். அப்போது நகரச் செயலாளராக இருந்த நான், இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தேன். தலைவர் கலைஞர் மேடையில் பேசிக் கொண்டிருக்கும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.


**-வெ.சதானந்தம், முன்னாள் நகரச் செயலாளர் செங்கம், திருவண்ணாமலை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033 –24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம் நூல் சர்ச்சை!

**1994-ஆம் ஆண்டு, தலைமைத் தேர்தல் அதிகாரியாக இருந்த டி.என்.சேஷன் வாழ்க்கை வரலாற்று நூலை, கோவிந்தன் குட்டி என்பவர் எழுதினார். அந்த நூலில் 1965-ஆம் ஆண்டில் கழகம் முன்னெடுத்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்தும், பேரறிஞர் அண்ணா குறித்தும் அவதூறான கருத்துகளை முன்வைத்திருந்தார். அந்தக் கருத்துகளை நீக்க வேண்டும் என கலைஞர் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், நூலை வெளியிடக்கூடாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து இடைக்காலத் தடை பெற்றார். கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம், கண்டனப் பொதுக்கூட்டம் என போராட்டங்களும் நடைபெற்றன. தொடர்ந்து சர்ச்சைக்குரிய பகுதிகள் நீக்கப்பட்டு புத்தகம் வெளியானது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 143




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.